**செய்தி வெளியீடு எண்: 162** **நாள்: 18.02.10**

<u>செய்திக் குறிப்பு</u>

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, மாணவர்களுக்கும் வேலை நாடுநர்களுக்கும் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு குறித்த வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளைப் பல்லாண்டு காலமாக அளித்து வருகிறது. இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியினைக் கருத்தில் கொண்டு அதற்கு தக்கவாறு தொழில்நெறி வழிகாட்டுதலை மேற்கொள்ளும் வகையில் +2 வகுப்பு மாணவர்களுக்கான உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு குறித்த வழிகாட்டுதலை சென்னை BSNL நிறுவனத்தின் உதவியுடன் இலவச தொலைபேசி (Toll Free) வாயிலாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

இதற்கென, சென்னை BSNL நிறுவனம் இலவச குறுகிய கால தொலைபேசி அழைப்பு வசதியினைத் தற்போது வழங்கியுள்ளது. இதன்படி சென்னை BSNL நிறுவனத்தின் எல்லைக்குட்பட்டுள்ள சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களிலிருந்து BSNL-ன் தரைவழி மற்றும் அலைபேசி வழி மேற்கொள்ளப்படும் தொலைபேசி அழைப்புகளுக்கு கட்டணமின்றி இலவசமாக (Toll Free) உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு குறித்த வழிகாட்டுதல் தகவல்களைப் பெறலாம்.

இந்த வழிகாட்டும் நிகழ்ச்சியினை டாக்டர் தி. பிரபாகர் ராவ், இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அவர்கள் இன்று 18.02.2010 முற்பகல் 10.00 மணிக்கு தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் திரு ஆ.சு. ஜீவரத்தினம், இ.ஆ.ப. ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, மற்றும் ஆணையரக உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர். மாணவர்களின் எதிர்கால படிப்பு, வேலைவாய்ப்பு குறித்த கேள்விகளுக்கு பதில் அளித்தனர்.

இந்நிகழ்ச்சியில் கீழ்காணும் வல்லுநர்களும் கலந்து கொண்டு மாணவர்கள் மற்றும் பெற்றோர்களால் எழுப்பப்பட்ட வினாக்களுக்கு பதில் அளித்தனர்.

1. திருமதி, சாந்தி ஜம்பு மகாதேவன்,
   தி இன்ஸ்டியூட் ஆஃப் சார்ட்டர்ட் அக்கவுண்ட்ஸ் ஆஃப் இண்டியா, சென்னை
2. தலைவர்,
   தி இன்ஸ்டியூட் ஆஃப் காஸ்ட் வொர்க் அக்கவுண்ட்ஸ் ஆப் இண்டியா, சென்னை
3. முதல்வர், அப்பேரல் ட்ரெய்னிங் & டிசைன் செண்டர். சென்னை
4. திருமதி ஜி சாய் சங்குராய்,
   நேஷனல் இன்ஸ்டியூட் ஆஃப் பேஃஷன் டெக்னாலஜி. சென்னை
5. திரு மைக்கேல் சந்தோஷ் இன்ஸ்டியூட் ஆஃப் ஹோட்டல் மேனேஜ்மெண்ட், சென்னை
6. திரு வி.ஜி. சுந்தரவேலு, கர்னல், ரெக்ரூட்மெண்ட் ஜோன் தலைமையிடம், சென்னை 9.
7. திரு ஆர். நடராஜன், உதவி இயக்குநர் (வேலைவாய்ப்பு) சென்னை

இந்நிகழ்ச்சியானது இன்று 18.02.2010 தொடங்கப்பட்டு தொடர்ந்து 19.02.2010, 20.02.2010, 22.02.2010, 23.02.2010 ,24.02.2010 மற்றும் 25.02.2010 ஆகிய ஆறு நாட்களுக்கு நடத்தப்படவுள்ளது. மேற்குறிப்பிட்ட நாட்களில் தினமும் முற்பகல் 10.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை நடைபெறும். இந்நிகழ்ச்சியானது சென்னை 32, கிண்டி, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, ஆணையரக கூட்ட அரங்கினில் இருந்து நடத்தப்பெறும். இவ்வழிகாட்டி நிகழ்ச்சியில் பொறியியல், மருத்துவம், மருத்துவம் சார்ந்த படிப்புகள், வணிகவியல், கணிதம், கணினி கலை மற்றும் அறிவியல் படிப்புகள், பொதுவான படிப்புகள் மற்றும் தொழில்சார் படிப்புகள் மற்றும் அதற்குரிய வேலைவாய்ப்புகள், தொடர்பான விவரங்களைப் பெறலாம்.

மேற்கூறிய தினங்களில் பெற்றோர் மற்றும் மாணவ, மாணவியர்கள், உரிய ஆலோசனைகளைப் பெற BSNL–ன் தரைவழி மற்றும் அலைபேசி வழியாக **12799** என்கிற எண்ணிற்குத் தொடர்பு கொள்ள வேண்டும். மேற்காணும் வழிகாட்டுதலை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு டாக்டர் திரு தி. பிரபாகர் ராவ், இ.ஆ.ப., **அரசு முதன்மைச் செயலர்**, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அவர்கள் இந்நிகழ்ச்சியுனைத் துவக்கி வைத்து பேசுகையில் கேட்டுக் கொண்டார்.

ஒப்பம்/– ஆ.சு. ஜீவரத்தினம்.,
ஆணையர்.

* * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**